*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 571- 573, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# இலக்கியங்களில் நடுகற்கள்

இரா. ஜெயசிந்து
S.B.K.கல்லூரி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
Email: jayasindhuramamoorthi10@gmail.com

**ஆய்வுச்சாரம்**

பண்டைய தமிழரின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள நடுகற்கள் முக்கிய சான்றாக உள்ளன. சங்க இலக்கியங்கள் மூலமாக அவற்றின் சிறப்புக்களை பாடல்கள் எடுத்துரைக்கின்றன. ஆண்கள் மட்டுமில்லாமல் பெண்களுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்ட செய்தியை சிலப்பதிகாரம் மூலம் அறிய முடிகிறது. தொல்காப்பியம் நடுகற்கள் எடுப்பதற்கான ஆறுநிலைகளி 'கல்லெடுத்தல்' என்ற பெயரில் கூறுகிறது. மேலும் அதியமான் போன்ற அரசனின் நடுகற்களுக்கு போர் வீரர்கள் மயிலிறகு சூட்டி வழிபட்தன் மூலம் மன்னனின பெருமையை இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. ஒவ்வொரு இலக்கியங்களின் மூலம் நடுகற்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன எனபதை அடிப்படையாக கொண்டு இந்த ஆய்வு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்கள்:** பதிவிரதைகள், பதுக்கை, பீலி, கால்கோள்

பண்டைய தமிழரின் வாழ்வியல், சமூகம், பொருளாதார நிலைகளை அறிந்து கொள்ள பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் நடுகற்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. போரில் இறந்த வீரனுக்கு மட்டுமல்லாது தன் வீட்டில் வளர்க்கும் செல்ல பிராணிக்கும் கூட நடுகற்கள் நடப்பட்ட செய்தி வியப்பைத் தருகின்றது.[1] ஆநிரைகளை மீட்ட விரனுக்கும் காட்டு விலங்குகளிடமிருந்து மக்களை பாதுகாத்த வீரனுக்காகவும் ஊர் மக்களுக்கு உதவிய மாமனிதர்களுக்கும் நடுகற்கள் நடப்பட்ட செய்தியை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**நடுகற்களின் காலம்**

தமிழகத்தில் சங்க காலம் தொட்டே (பொ.ஆ.மு.4-ம் நூற்றாண்டு முதல்) வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்துள்ளது.[2] சங்க இலக்கியங்கள் பல நடுகற்கள் பற்றியும் அவை நடப்பட்டதற்கான காரணங்கள் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் நடுகல் நடுவதற்கான ஆறு நிலைகளை கூறியுள்ளது. நடுகற்கள் முற்காலத்தில் இறந்தவர் நினைவாய் ஒரு பெரிய கல் எழுப்பி வணங்கினர்.[3] பின்னர் கி.மு. 4-ம் நூற்றாண்டில் அக்கற்களில் இறந்தவரின் பெயரையும், ஊரையும் இறந்த காரணத்தையும் கல்லில் பொறித்துள்ளனர். அதற்கடுத்த காலங்களில் இறந்தவரின் உருவத்தினையும் அவர் காட்டிய வீரத்தையும் சிற்பமாய் வடிக்கும் வழக்கம்

வந்தது. பல்லவர் காலம் தொட்டு நாயக்கர் காலம் வரை இவ்வகை நடுகல் காணப்படுகின்றன.

**நடுகல் வழிபாடு**

போரில் இறந்துபடும் வீரர்களின் நினைவைப் போற்றுதல் மட்டும் நடுகல் வழிபாட்டின் நோக்கம் அல்ல. வீரம் செறிந்த வரலாற்றினை பிற்கால தலைமுறையினர் உணர்வதற்கும் நடுகல் வழிபாடு வலியுறுத்தப்பட்டது.[4] போரில் ஈடுபடும் வீரர்கள் தமக்கு முன்னர் இறந்துபட்ட வீரர்களை வழிபடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர் என்பதை காணமுடிகிறது. வெட்சி வீரர்கள் கரந்தை வீரர்களை வென்று ஆநிரைகளை கவர்ந்து வந்தனர். கரந்தை வீர்ர்கள் வெட்சியார் கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்டு வந்தனர். தம் வலிமைக்கு காரணமாக இருந்த தெய்வத்தை வழிபடுவதற்காக அதன் மேல் மயில் பீலியை சூட்டினர்.

நுழைநுதி நெடுவேல் குறும் படை மழவர்

முனை ஆத் தந்து முரம்பின் வீழ்த்த

வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்

நடுகல் பீலி சூட்டி துடிப்படுத்து

தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்

போக்கு அருங் கவலைய புலவு நாறு அருஞ்சுரம்

(அகம்.35)

என்னும் பாடல் குறிப்பிடுகிறது.[5]

அய்யனார், மதுரை வீரன், சங்கிலிக் கருப்பன், பாவடைராயன் போன்ற சிறு தெய்வங்களும் நடுகல் வழிபாட்டுடன் தொடர்புடையவை ஆகும்.

ஆண்கள் மட்டுமல்லாமல் கன்னிகா பரமேஸ்வரி, இரேணுகா தேவி, வஞ்சியம்மன் போன்றோர் பதிவிரதைகளாக நடுகல் ஆகியுள்ளனர்.

**இலக்கியங்களில் நடுகற்கள்**

இந்த உலகத்தில் தம் புகழை நிலைநிறுத்த விரும்பிய வீரர்கள் நிலையில்லாத உடலையும் உயிரையும் போரில் இறக்க முன்வந்து தாம் நினைத்தவாறு அழியாத புகழைப் பெற்றனர். அவ்வாறு இறந்த வீரனது புகழை நிலைநிறுத்தும் பொருட்டு நடுகல்லை நிறுவி வழிபட்டனர் என்பது இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்தியாகும்.[6] சங்க இலக்கியங்களான எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் நடுகல் பற்றி குறிப்பிடுகின்றன.

**ஐங்குறுநூறு:**

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்

எழுத்துட நடுக லன்ன விழுப்பிணர்ப்

பெருங்கை யானை"

-ஐங்குறுநூறு-352

இப்பாடலை ஓதலாந்தையார் பாடியுள்ளார்.[7] சொரசொரப்பான எழுத்துக்கள் பொறித்த நடுகல்லை யானையின் தும்பிக்கையுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

**அகநானூறு**

அகநானூறு அகம் சார்ந்த நூலாகும். அகநானூறு என்னும் நெடுந்தொகையில் நடுகல் தொடர்பான 11 பாடல்கல் இடம் பெற்றுள்ளன.[8] அதில்

நடுகல்லில் வீரனின் பெயர்கள் பொறித்த செய்திகளை **அகம் 67: 9-11** எடுத்துரைக்கின்றன.

ஆள் நடமாட்டம் இல்லாத காட்டுப் பகுதியில் நடுகற்கள் நடப்பட்டன என்பதை **அகம் 179: 7-9** பாடல்கள் கூறியுள்ளன.

**புறநானூறு**

புறநானூற்றில் 12 பாடல்கள் நடுகல் பற்றிய செய்தியை கூறுகின்றன. சங்க காலத்தில் முன்னூர் என்னும் ஊரில் நிரை மீட்க நடந்த போரில் வீரன் ஒருவன் வீரமரணம் அடந்து அவனுக்காக நடுகல் எடுக்கப்பட்டதை **புறம் -260 (12-15)** ல் வட மோதங்கிழார் குறிப்பிடுகிறார்.[9]

அதியமான் தகடூர் நாட்டின் மேலே படையெடுத்துசென்று வீரமரணம் அடைந்ததன் நினைவாக நடுகல் எடுத்து மயிலிறகு சூட்டி கல் வைத்து படைத்ததை **புறநானூற்றில் 232: 1-6** வரிகள் கூறுகின்றன.

**திருக்குறள்**

உலகப்பொதுமறை என அழைக்கப்படும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் படைசெருக்கு அதிகாரத்தில் நடுகல் பற்றிய குறள் காணப்படுகிறது.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலரென்னை

முன்நின்று கல்நின் றவர்"

குறள் 771.[10] பட்டினப்பாலை

பட்டினப்பாலை (78-80) பாடலில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் மீனவர்களின் குடிசை அமைப்பை நடுகல் அமைப்போடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.[11]

### பதிற்றுப்பத்து

செங்குட்டுவனுடைய தம்பியாகிய ஆடுகோட்பாட்டு சேரலாதன் விந்தியமலைப் பிரதேசத்தில் சென்று பகைவருடைய பசுக்களை கவர்ந்து கொண்டு சேரநாட்டில் கொண்டு வந்து பலருக்கு கொடுத்தான் என்ற செய்தியை பதிற்றுப்பத்தில் 6-ம் பத்துப் பதிகம் கூறுகிறது.[12]

### ஐந்திணை ஐம்பது

இப்பாடலை மாறன் பொறையானார் பாடியுள்ளார்.[13] இதில் 35வது பாடலில் நடுகற்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

### ஐந்திணை எழுபது

மூவாதியார் இயற்றிய ஐந்திணை எழுபதில் 32வது பாடல் தோழி தலைவியிடம் போரில் மடிந்த வீரர்களின் பெயர்கள் நடுகற்களில் பொறிக்கப்பட்டு நடப்பட்டுள்ள செய்தியை கூறுகிறாள்.[14]

### சிலப்பதிகாரம்

ஆண்களுக்கு மட்டுமில்லது கற்பிற் சிறந்த காரிகையருக்கும் வீரக்கல் எடுக்கப்பட்ட வழக்கினை இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் (27: 14-16) காட்டுகிறது.[15]

### தொல்காப்பியம்

தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் நடுகல் எடுக்கும் முறை குறித்து ஆறு நிலைகளை தொல்காப்பியர் கூறியுள்ளார்.[16]

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்சீர்த்தகு மரபில்

பெரும்படை வாழ்த்தலன்று இருமூன்று மரபிற்"

(தொல்பொருள் 63)

இதில் உள்ள பெரும்படையும் வாழ்த்தலும் நடுகல் வழிபாட்டைக்

குறிப்பதாகும்.[17]

### முடிவுரை

இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள நடுகற்கள் மூலம் போர் வீரனின் வீரத்தையும் உயிர் தியாகத்தையும் நம்மால் அறிய முடிகிறது. மேலும் அதில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் மூலம் நடுகல் எழுப்பபட்டதற்கான காரணத்தை தெரிந்து கொள்ள இலக்கியங்கள் உதவி புரிகின்றன. பெண்களுக்கு எழுப்பப்பட்ட நடுகற்கள் மூலம் அக்காலக் கட்டத்தில் பெண்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை சிலப்பதிகாரம் மூலம் காணலாம். தொல்காப்பியமானது நடுகற்களை காட்சிப்படுத்தி நீரினால் சுத்தம் செய்து கல்லினை நட்டு அதனை தெய்வமாக்கி வாழ்த்தியுள்ளதன் மூலம் நடுகற்கள் மக்கள் வாழ்க்கையில் இன்றும் அழியாப் புகழைப் பெற்றுள்ளது என்பதனை காணமுடிகிறது.

### அடிக்குறிப்புகள்

1. . http://www.keetru.com ஆ. நந்திவர்மன் -தமிழரின் வாழ்வியல் பதிவுகள் (சங்க காலம் முதல் தற்காலம் வரை)
2. http://www.tamilvu.com முனைவர் மா. பவானி, உதவிப்பேராசிரியர், கல்வெட்டியல் துறை, நடுகல் (வீரர் கல்).
3. http://www.vikatan.com திருச்சி பார்த்தி, நடுகற்கள் எடுக்கும் முறை பற்றி தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள்- விகடன் மாதஇதழ்- 8 ஜூன் 2022.
4. ந. வனமாலை, பண்டைய தென்னிந்தியாவில் நடுகல் வழிபாடு, சமூக விஞ்ஞானி-3, 1975, ப.40-46.
5. குளோரியா.வி.தாஸ். சங்க இலக்கியத்தில் நடுகல் வழிபாடு, சர்வதேச தமிழ் ஆய்விதழ், International Research Journal of Tamil ,2019, ப.59.
6. இ. சுந்தரமூர்த்தி, நடுகல்லும் இலக்கியமும், Seminar on Herostones, 1975, ப.70
7. ரெ. விஜயராகவன், சு. ராஜபாண்டி, விருதுநகர் மாவட்ட நடுகற்கள் தொகுதி-1, அமிர்தம் பதிப்பகம், 2023, ப.26
8. ஐங்குறுநூறு – 352வது பாடல்
9. அகம் – 67, 179
10. புறம் – 260, 232
11. பட்டினப்பாலை – 78-80
12. குறள் 771
13. ஐந்திணை ஐம்பது – 35
14. ரெ. விஜயராகவன், சு. ராஜபாண்டி, விருதுநகர் மாவட்ட நடுகற்கள் தொகுதி-1, அமிர்தம் பதிப்பகம், 2023, ப.41
15. சிலப்பதிகாரம்- 27 (14-16)
16. திருச்சி பார்த்தி, நடுகற்கள் எடுக்கும் முறை பற்றி தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள்- விகடன் மாதஇதழ்- 8 ஜூன் 2022.
17. தொல்காப்பியம் – பொருளதிகாரம் 63

*****



©2023 by KRISHMA PUBLICATION